# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,027—1962 අප්‍රේල් 19 වැනි බ්‍රහස්පතින්දා—1962.4.19

13,027 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 19 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுகள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 229 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L.D.—B. 207/41.

### சம்பளச்சபைச் சட்டம்

#### 6 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நூல்நூற்றல், நெசவுசெய்தல் (மேசுவகை, உள்ளுடைகள் தயாரித்தல் உட்பட) உடைதயாரித்தல் தொடர்பாயதும் இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டதுமான கட்டளை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் பிரகாரம் என்னுற் பிறப்பிக்கப்பட்டதென்று அச்சட்டத்தின் 6 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய கட்டளை 1962 ம் ஆண்டு மே மாதம் 1 ந் தேதியன்று நடைமுறைக்குவரும்.

எம். பீ. டி இசற். சிரிவர்தன,
தொழில், தேசீயமய சேவை மந்திரி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 10 ந் உ.

#### அட்டவணை

சம்பளச்சபைகள் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழில்களுக்குப் பொருந்தும்:

நூல் நூற்றல், நெசவு செய்தல் (மேசுவகை உள்ளுடைகள் தயாரித்தல் உட்பட) உடை தயாரித்தல் தொடர்பாய தொழில் ; அதாவது :—

(I) பஞ்சையும் பிறபொருட்களையும் நூலாக நூற்றல் ;

(II) நெசவு செய்தல் ;

(III) உடைகளும், மேசுவகை உள்ளுடைகளும் தயாரித்தல்.

பின்வருவனவும் இவற்றிற்குட்படும்—

(அ) நூல் நூற்றல் :—

(1) விதை பருத்தி ஊட்டிகள் ;

(2) விதை பருத்தி விநியோகிகள் ;

(3) பருத்தி விதை நீக்கி எந்திர ஊட்டிகள் ;

(4) விதை நீக்கிய பஞ்சு திரட்டுவோர் ;

(5) விதை நீக்கிய பஞ்சைப் பையில் அடைப்போர் ;

(6) பருத்தி விதை திரட்டுவோரும் பையில் அடைப்போரும் ;

(7) கலப்படுத்தும் தொழிலாளர் ;

(8) ஒரு சேரக்கூட்டும் எந்திர ஊட்டிகள் ;

(9) மடி முடிவை ஏற்போர் ;

(10) மடி சுமப்போர் ;

(11) இரும்பு அல்லது மரமூளை கொண்டு சிக்கெடுப்போர் ;

(12) எண்ணெய் விடுவோர் ;

(13) உரிப்போர் ;

(14) அரைப்போர் ;

(15) வரவு சட்ட ஊட்டிகள் ;

(16) சிக்கெடுக்கும் எந்திர ஊட்டிகள் ;

(17) மடி எந்திர ஊட்டிகள் ;

(18) சிக்கெடு எந்திரத்தை வரிசைப்படுத்துவோர் ;

(19) சீர்கேடான எந்திரத்தை வரிசைப்படுத்துவோர் ;

(20) உள் எந்திர வரிசையாளர் ;

(21) திரிந்திடும் எந்திர வரிசையாளர் ;


***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.***

***வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.***

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

(22) திரிந்திடும் எந்திர நீக்கிகள் ;
(23) நூல் சுற்றும் கட்டை தாங்கிகள் ;
(24) சுற்று நூற்பு நூற்பாளர் ;
(25) சுற்றுச் சட்டம் நீக்கிகள் ;
(26) கூட்டிப் பிணைப்போர் ;
(27) நூல் சுமப்போர் ;
(28) நூல் சுற்றும் கதிர் பழுது பார்ப்போர் ;
(29) கரை நீக்கும் வேலையாட்கள் ;
(30) கங்காணிகள் ;
(31) கூட்டுவோர் ;
(32) நூலில்லாத் தனிக்கட்டைகள் சுமப்போர் ;
(33) பசை ஏற்றிய நூற் சுற்றிகள் ;
(34) வீண் மூளைக்கட்டைகளை வரிசைப்படுத்துவோர் ;
(35) உதவாதன ஒட்டப்பட்டதை வரிசைப்படுத்துவோர் ;
(36) துரிதப்படுத்துவோர் ;
(37) நூல் விநியோகிப்போர் ;
(38) திரிவட்ட எந்திர இயக்கிகள் ;
(39) நூல் சிப்பமாக்குவோர் ;
(40) நூல் நூற்றலில் ஈடுபடும் மற்றெந்த தொழிலாளர்களும்.

(ஆ) நெசவு செய்தல் :—
(1) நரை நூல் சுற்றிகள் ;
(2) நிற நூல் சுற்றிகள் ;
(3) மேல் வீச்சு நூல் சுற்றிகள் ;
(4) உண்டை குறுக்கு நூல் சுற்றிகள் ;
(5) நூல் தூக்கிகள் ;
(6) கூட்டிகள் ;
(7) பூட்டிகள் ;
(8) எண்ணெயூட்டிகள் ;
(9) தராசுக்கோல் தூக்கிகள் ;
(10) பாவு நூலோட்டிகள் ;
(11) பின்னணி அளவைப்படுத்துவோர் ;
(12) முன்னணி அளவைப்படுத்துவோர் ;
(13) இழுத்தெடுப்பிகள் ;
(14) வியாபிகள் ;
(15) நூல் சுற்றிகள் ;
(16) நெசவாளர் ;
(17) விசைத்தறி இயக்கிகள் ;
(18) சில்லறை வேலையாளர் ;
(19) வெட்டுப் பார்வையாளர் ;
(20) தையல் ஆட்கள் (ஆண்கள்) ;
(21) பொசுக்கி அளவுப்படுத்துவோர் ;
(22) கழுவு எந்திரக் கையாட்கள் ;
(23) வெள்ளாவி வைக்குமிடா அவியற்காரர் ;
(24) சலவைக்கேணிக் கையாட்கள் ;
(25) சிறு எந்திர இயக்கிகள் ;
(26) பிரித்தெடு கருவி வேலையாட்கள் (ஆண்கள்) ;
(27) உலர்த்தும் எந்திர வேலையாட்கள் (ஆண்கள்) ;
(28) நூலைப் பளபளவாக்குமாண்கள் ;
(29) நூல் மணம் போக்கும் எந்திர வேலை ஆண்கள் ;
(30) துணிக்கு மெருகு கொடுக்கும் எந்திர வேலையாண்கள் ;
(31) மடிக்கும் எந்திர வேலையாண்கள் ;
(32) மடிக்கும் ஆண்வேலையாட்கள் ;
(33) மடிக்கும் பெண் வேலையாட்கள் ;
(34) முத்திரை குத்திச் சிப்பமாக்கும் ஆண் வேலையாட்கள் ;
(35) மூட்டையாக்குப் பரிசோதகர்கள் ;
(36) மூட்டை அமுக்கி இயக்கிகள் ;
(37) வர்ணத்திரை அச்சுகள் தயாரிப்போர் ;
(38) வர்ணத்திரை அச்சடி மேற்பார்வையாளர் ;
(39) வர்ணத்திரை அச்சடியாளர் ;
(40) சாயமிட்டுச் சலவையாக்கும் எந்திர வேலையாண்கள் ;
(41) சாயமிட்டுச் சலவையாக்கும் வேலையாட்கள் ;
(42) சாயமிட்டுச் சலவையாக்கும் தொட்டித் தொழிலாளர் ;
(43) சாயமிட்டுச் சலவையாக்கும் தொட்டிக் கங்காணிகள் ;
(44) கட்டுப்பந்தமாக்கும் சிறுமிகள் ;
(45) நெசவு செய்தலில் ஈடுபட்டிருக்கும் மற்றெவ்வித தொழிலாளர்களும்.

(இ) மேசுவகை உள்ளுடைகள் தயாரித்தல் உட்பட உடைகள் தயாரித்தல் :—
(1) தலைமையாளர் அல்லது பிரிவு மேற்பார்வையாளர் ;
(2) ஒதுக்கி வைக்கும் ஆண்வேலையாட்கள் ;
(3) படலம் அடுக்கும் சிறுமிகள் ;
(4) படலம் அடுக்கும் எந்திர இயக்கிகள் ;
(5) வடிவ அமைப்பு வரைவோரும் வெளியாக்குவோரும் ;
(6) வெட்டியெடுப்போர் ;
(7) துண்டாடும் எந்திர இயக்கிகள் ;
(8) கையால் துண்டாடுவோர் ;
(9) மின்சக்தியால் துண்டாடும் இயக்கிகள் ;
(10) தையற்காரர்கள் ;
(11) தையல் எந்திர இயக்கிகள் ;
(12) சீராக்கும் சிறுமிகள் ;
(13) சரிபார்க்கும் சிறுமிகள் ;
(14) மடிக்கும் சிறுமிகள் ;
(15) சில்லறைவேலைச் சிறுமிகள் ;
(16) சிப்பமாக்கிக் கட்டிக்கொடுக்கும் சிறுமிகள் ;
(17) முத்திரையடிச் சிறுமிகள் ;
(18) கழுத்துப்பட்டி பதவிடும் சிறுவர்கள் ;
(19) ஸ்திரிக்கையிடும் சிறுமிகள் ;
(20) காற்சட்டைகளுக்கு முற்றுத்தையல் போடும் சிறுமிகள் ;
(21) திரை அச்சிடும் சிறுமிகள் ;
(22) சப்பாத்துக் கயிறும் பட்டியும், பின்னல் நாடாவும் செய்யும் எந்திர இயக்கிகள் ;
(23) கைத்திரிப்பாளர் ;
(24) எந்திரத்திரிப்பாளர் ;
(25) பாகோடிகள் ;
(26) சிற்றுடைத் துணிரகம் கட்டுப்படுத்துவோரும் பார்வையாளரும் ;
(27) நூல் சுற்றிகள் ;
(28) நெசவாளரும் பின்னற்காரரும் ;
(29) சில்லறை வேலைக்காரர் ;
(30) கைத்தறி நேசவாளர் ;
(31) ஒற்றடிப்பம்மல் எந்திர இயக்கிகள் ;
(32) திருப்பு எந்திர இயக்கிகள் ;
(33) வெள்ளாவி அவிக்கும் மிடா இயக்கிகள் ;
(34) நீராவிக்கொதிகல இயக்குநர் ;
(35) அச்சடித்துணி (சீத்தை) அவிக்கும் தொழிலாளர் ;
(36) கழுவு எந்திர இயக்கிகள் ;
(37) சாயம்போடும் எந்திர இயக்கிகள் ;
(38) ஆண் சலவைக்காரர் ;
(39) தண்ணீர் புளியும் எந்திர இயக்கிகள் ;
(40) உலர்த்து எந்திர இயக்கிகள் ;
(41) துணிக்கு மெருகு கொடுக்கும் எந்திர இயக்கிகள் ;
(42) திரை வர்ண அச்சடிப்போர் ;
(43) திரை அச்சிடும் சிறுமிகள் ;
(44) திரை அச்சிடும் உதவியாளர் ;
(45) கத்தரித்து சீர்படுத்தும் சிறுமிகள் ;
(46) செலபோன் உறைகளும் அட்டைப்பெட்டிகளும் தயாரிப்போர் ;
(47) ஸ்திரிக்கை போடும் சிறுமிகள் ;
(48) ஸ்திரிக்கையிடும் ஆண்கள் ;
(49) மின்சக்தி ஸ்திரிக்கை இயக்கிகள் ;
(50) துண்டாடிக் கொழுப்பேற்றி எண்கூறாய் கணக்கெடுக்கும் எந்திர இயக்கிகள் ;
(51) பசை போடுஞ் சிறுமிகள் ;
(52) கையால் பஞ்சுத் துசும்பு சீராக்கும் சிறுமிகள் ;
(53) எந்திரத்தால் பஞ்சுத் துசம்பு சீராக்கும் சிறுமிகள் ;
(54) மேசுவகை உள்ளுடைகள் உட்பட ஏனைய உடை தயாரித்தல் ஈடுபட்டிருக்கும் மற்றெந்த தொழிலாளர்களும்.

பின்வரும் வேலையாளரின் வேலை இதற்குட்பட்டதன்று :—

(1) லிகிதர், காசாளர், பண்டகசாலைப்பொறுப்பாளர், நேரக்குறிப்பாளர், காவலாளிகள், பாதுகாப்பாளர்.

(2) கிராமாபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் பகுதியின் ஆதரவில் நடத்தப்படும் கைத்தறி, விசைத்தறித் திட்டங்களில் வேலை பார்க்கும் வேலையாளர்.

(3) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டார் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர்.

(4) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ம் தேதி வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாயிதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத்தொழிலிலுள்ள வேலையாளர்.

## 1961 ம் ஆண்டின் 62 ம் இலக்க வியாபாரிகளுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கற் சட்டம்

### 4(7)ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 62 ம் இலக்க வியாபாரிகட்கு உத்தரவுப் பத்திரம் வழங்கற் சட்டத்தின்கீழ் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பெற்ற கீழ்க்கண்ட பிரமாணங்கள் மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன வென்று இதனால் அறிவிக்கப்படுகின்றது.

(1) வியாபாரிகளுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கல் (இல. 1) பிரமாணங்கள், 1961 ஐத் திருத்தியமைத்த, 1961 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ந் திகதி வெளியிடப்பட்ட 12,721 ம் இலக்க அதிவிசேஷ அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரமாணம்.

(2). 1961 ம் ஆண்டின் 62 ம் இலக்க வியாபாரிகட்கு உத்தரவுப் பத்திரம் வழங்கட் சட்டத்தின் 2 ம் பிரிவிலிருந்து குறிப்பிட்ட சிலருக்கு விலக்கு அளித்த, 1961 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ந் திகதி வெளியிடப்பட்ட 12,721 ம் இலக்க அதிவிசேஷ அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரமாணம்.

(3) வியாபாரிகளுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கல் (இல. 1) பிரமாணங்கள், 1961 ஐத் திருத்தியமைத்த, 1961 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ந் திகதி வெளியிடப்பட்ட 12,728 ம் இலக்க அதிவிசேஷ அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரமாணம்.

(4) வியாபாரிகளுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கல் (இல. 1) பிரமாணங்கள், 1961 ஐத் திருத்தியமைத்த, 1962 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ந் திகதி வெளியிடப்பட்ட 12,932 ம் இலக்க அதிவிசேஷ அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரமாணம்.

எச். ஈ. தென்னக்கூன்,
மேலதிக நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்ரல் மீ 10 ந் உ.

4—520.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.